மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் தொகுதியில் தேங்காய் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லையென்று சொன்னாலும்கூட, ஆர்வம் உள்ள தொழில் முனைவோர் இத்தொழில் தொடங்க முன்வந்தால் மாவட்ட தொழில் மையம் தக்க ஆலோசனைகளை வழங்கி தொழில் தொடங்க ஆவன செய்யும். தொழிலில் பின்தங்கிய வட்டாரத்தில் தொழிற்சாலை அமைக்கப்பெற்றால் அதற்கு மாநில முதலீட்டு மானியமாக 15 சதவீதமும், மிகவும் பின்தங்கிய வட்டாரங்களில் தொடங்கப்படும் தொழிற்சாலைகளாக இருப்பின் மாநில முதலீட்டு மானியமாக 20 சதவீதமும் வழங்க அரசு தயாராக இருக்கிறது.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன்: மேலும் இந்தப் பவுடரை இரசாயனத் தொழிற்சாலைகளிலே உரம், பூச்சி மருந்து போன்றவற்றுக்குப் பயன்படுத்த இருக்கிறார்கள் என்ற தகவலையும் இங்கே சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தி. வேல் முருகன்.

திரு. தி. வேல் முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பண்ருட்டி தொகுதியில் அதிகமாக விளையக்கூடிய முந்திரிக்காக ஒரு முந்திரித் தொழிற்சாலை கொண்டு வருவதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 123, திரு. மா. இராஜசேகர், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

2002 ஏப்ரல் 10]
123—

பொருட்காட்சி

***13922—திரு. மா. இராஜசேகர்:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராஜபாளையம் தொகுதியில் பொருட்காட்சி நடத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சிந்தனைக் கூர்மையால், செயல் திறத்தால் எதிரிகளின் கூடாரம் அதிர்ந்து நடுநடுங்க

'பிறர்க்குஇன்னா முற்பகல் செய்யின் தமக்குஇன்னா
பிற்பகல் தாமே வரும்'

என்ற குறளுக்குரிய விளக்கத்தை உலகறியச் செய்த உன்னத தெய்வமே, சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை ஒன்றியப் பெருந்தலைவராக, திருச்சி புறநகர் மாவட்ட இணைச் செயலாளராக, மாவட்டச் செயலாளராக, உலகப் பிரசித்தி பெற்ற ஸ்ரீரங்கம் சட்டப் பேரவை உறுப்பினராக, அமைச்சராக என்போல் எளிய தொண்டனை உயர்த்தி அழகுபார்க்கும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்கி விடையளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) இதுகுறித்த செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. மா. இராஜசேகர்: மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் தொட்டு வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது பொதுமக்களுக்குப் பயன்படும் வகையில் அரசு பொருட்காட்சி

நடத்தப்பட்டது. அதன் பின்பு அரசு பொருட்காட்சி நடத்தப்படவே இல்லை. மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு பொருட்காட்சி நடத்த முன்வருமா என்பதனைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மதுரை, சேலம், கோயம்புத்தூர் ஆகிய நகரங்களில் பொருட்காட்சிகள் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகின்றன. வேலூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய நகரங்களில் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை அரசு பொருட்காட்சிகள் நடத்தப்படுகின்றன. பொருட்காட்சிகள் பொழுதுபோக்கு அம்சமாக மட்டும் இல்லாமல் செய்திகளைத் தெரிவிக்கும் சாதனமாகத் திகழ வழிவகை செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைச் சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 124, திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்.

124—

நெசவாளர்களுக்குக் கூலி உயர்வு

***130—திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி பகுதியில் பட்டு நெசவுத் தொழில் நெசவாளர்களுக்குக் கூலி உயர்வின்மையால் பட்டு நெசவுத் தொழிலில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இதை நிவர்த்தி செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆரணி பகுதியில் பட்டு நெசவாளர்களுக்குக் கூலி உயர்வு இல்லாத நிலை இல்லை. மேலும் ஆரணி பகுதியில் பட்டு நெசவுத் தொழிலில் பாதிப்பு இல்லை.